# இயேசுவேவாரும்

காலேப்யோசுவா
வெளி.22.20 செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.
32,ஜெமிஎத்திராஜ்நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

## ஆன்லைனில் சபைகூடுதல் (ஞாயிறு ஆராதனை, கர்த்தருடைய இராப்போஜனம் போன்றவை) நடத்துவது உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசின் வஞ்சிப்பு. கள்ளகபடமுள்ள வேலையாட்களாகிய பாஸ்டர்களின் கெத்து

1.கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிஷேகனாக ஏற்படுத்தப்பட்ட காலேப் யோசுவா கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உங்களுக்கு கிருபையும் சமாதனமும் உண்டாவதாக. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக (எபே4:12) அதன் தலை கிறிஸ்து (எபே5:23) தங்களை பாஸ்டர்களாக/ மேய்ப்பர்களாக (எபே4:13) ஏற்படுத்தினார் என கூறி, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்டுள்ள கள்ளகபடமுள்ள வேலையாட்களே (2கொரி11:3) உங்கள் கிரியைகளே உங்களைக் குறித்து நீங்கள் யார் என சாட்சி கொடுக்கிறதாக இருக்கிறதே! இது குறித்து என் மூலமாய் கேள்விப்படுகிறதை விசுவாசிக்கிறவர்கள் யார்?

2.ஆன்லைனில் சபைகூடுதல் (ஞாயிறு ஆராதனை), கர்த்தருடைய இராப்போஜனம், முழுஇரவு ஜெபம், வீட்டு ஜெபக்கூட்டம்(Cottage prayer meeting) போன்றவைகளை நடத்தி, வேதவாக்கியங்களில் காணப்படும் நல்லொழுக்கத்தையும், கிரமத்தையும் கடைப்பிடிக்காமல் போனதென்ன? மார்ச் 2019-ல் இந்த ஆன்லைன் பரிவர்த்தனை குறித்து மிக்க தெளிவாக ஒரு நிருபத்தை எழுதியிருந்தேன். நீங்களோ அதை உங்கள் முதுகுக்கு பின் எறிந்துவிட்டீர்கள். பாஸ்டர் என தங்களை அழைத்துக்கொள்ளும் பலருடன் இது குறித்துப் பேசினேன். உம் உம் என்றார்களேயன்றி அதை கைக்கொள்ள தவறிவிட்டார்கள். ஆன்லைன் பரிவர்த்தனை விவகாரத்தில் தங்கள் இருதயத்தை கடினப்படுத்திக்கொண்டார்கள். ஆதலால் அவர்கள் திருந்தவில்லை. இவர்களுக்கு சபைக்கடுத்த மேற்கண்ட காரியங்களை ஆன்லைனில் நடத்துவது மிக்க கௌரவமாக இருக்கிறது. ஆனால் அது தேவனுக்கோ அருவருப்பாயிருக்கிறது என்பதை உணராதிருக்கிறார்கள். ஆக இந்நாட்களில் நான் உங்கள் மத்தியில் சபைக்கடுத்த காரியங்கள் குறித்து கண்டவைகளையும், கேட்டவைகளையும், வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஆராய்ந்து, நிதானித்து, பகுத்தறிந்து பார்த்ததில் உங்களில் அநேகர் கர்த்தரால் அவருடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஏற்படுத்தப்படவில்லை. மாறாக நீங்களே உங்களை இப்பிரபஞ்சத்துக்கடுத்த வாழ்க்கையின் பிழைப்புக்காக பாஸ்டர் என உங்களை அழைத்துக்கொண்டு, விசுவாசிகளை வஞ்சிக்கிறீர்கள் என உங்களைக் குறித்து குற்றம்சாட்டி, சபையை எச்சரிக்கும் நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டுள்ளேன்.

3.கவனியுங்கள், கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள்/அனுப்பப்பட்டவர்கள் பிரசங்கிக்கும்போது பரிசுத்தஆவி அவர்களோடு இடைபடுகிறார். பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிஷேசத்தை பிரசிங்கித்தார்கள் (1பேது1:12) கர்த்தருடைய ஆவியினால் பேசினார்கள் (நெகே9:30). ஆக தேவன் தம்முடைய வார்த்தையைஏற்படுத்தப்பட்டவர்கள்/ அனுப்பப்பட்டவர்கள்/ பிரசங்கிக்கிறவர்கள் வாயில் வைக்கிறார். இங்கு இந்த மூன்று பேர் பங்கை கவனியுங்கள். முதலாவது தேவன். இவர் அனுப்பப்பட்ட நபரோடு இடைபடுகிறார். இரண்டாவது அனுப்பப்பட்ட நபர். இவர் வாயில் தேவன் தம்முடைய வார்த்தையை வைக்கிறார்.மூன்றாவதாக பேசப்பட்ட வார்த்தையை/செய்தியை கேட்கும் ஜனங்கள். பாருங்கள், தேவனுடைய வசனத்தை அனுப்பப்பட்டவன் பிரசங்கிக்கிறான். ஜனங்கள் கேட்கிறார்கள்(ரோ:10:13-17). கவனியுங்கள், அனுப்பப்பட்டவர்கள் தங்கள் வாயின் வார்த்தையைக் கொண்டே ஜனங்களிடம் பரிமாற்றம்/தொடர்பு கொள்ளுகிறார்கள். ஆக தேவனால் ஒருவன் அழைக்கப்பட்டு, அனுப்பப்பட்டு தம்முடைய வார்த்தையை அவன் வாயில் வைக்க, அவன் அதை பிரசங்கிக்க, ஜனங்கள் விசுவாசத்தோடு கேட்கிறார்கள். நித்திய ஜீவனுக்கு

நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்(அப்:13:48). திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறவர்களும் உண்டு. அவர்கள் அதற்கென்றே நியமிக்கப்பட்டவர் களாயுமிருக்கிறார்கள்(1பேது2:8).

4.கிறிஸ்துவின் சரீரமாகிய சபை உருவானது. கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார்(அப்2:37-47). சபையை போஷிக்க ஐந்து வகை ஊழியங்களை ஏற்படுத்தினார்(எபே4:13). இந்த சபையின் பக்திவிருத்திக்காக, ஏற்படுத்தப்பட்ட ஐந்து வகை ஊழியங்கள் வாயிலாக, தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுகிறது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்கு சுவிஷேசமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே(1பேது1:25). மறுபக்கம் உபதேசங்களை, ஆலோசனைகளை கொண்ட நிருபம். வாயின் வார்த்தைகளினால் செய்தி பிரசங்கிக்கப்படுகிறது. நிருபங்கள் உபதேசத்தைக் கொண்டும், ஆலோசனைகளை கொண்டும் எழுதப்படுகிறது. நிருபங்களில் உபதேசங்கள், கடிந்துகொள்ளுதல், நீதியைபடிப்பித்தல், சீர்திருத்தல் போன்றவை அடங்கியிருக்கிறது. இதனால் மனுஷர் வேதவாக்கியங்களில் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகிறான்(2தீமோ3:16,17). ஆக இதை வாசிக்கிறவனும், கேட்கிறவனும், எழுதியிருக்கிறதை கைக்கொள்ளுகிறவனும் பாக்கியவான்கள்.

5.தேவன், அனுப்பப்பட்டவர், கேட்கும் விசுவாசிகள், இவர்களுக்குள் உள்ள Mode of Transmit அதாவது இடைநின்று தொடர்புபடுத்தும் செயலியை கவனியுங்கள். தேவனுக்கும், செய்தியை கேட்பவர்களுக்குமிடையில் அனுப்பப்பட்டவர்களின் வாயின் வார்த்தை. அதாவது தேவனுக்கும், அவருடைய வார்த்தையை கேட்பவர்களுக்குமிடையில் அனுப்பப்பட்டவர்கள் நின்று தொடர்புபடுத்தும் செயலிகளாக இருக்கிறார்கள். ஏனென்றால் தேவன் நேரிடையாக கேட்பவர்களோடு இடைபடுவதில்லை. தேவனிடமிருந்து பெற்ற வார்த்தையை அனுப்பப்பட்டவன் பிரசங்கிக்கிறான், ஜனங்கள் கேட்கிறார்கள். இதே போன்றுதான் தேவனுக்கும், விசுவாசிகளுக்கும் இடையில் அனுப்பப்பட்டவனுடைய நிருபங்கள் இடைபடுகின்றன.

6.இப்பொழுது இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்களாகிய பாஸ்டர்கள், ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்கள், தொலைக்காட்சி, வாட்ஸ்அப், யூடியூப், பேஸ்புக், டுவிட்டர் மற்றும் ஆன்லைன் வாயிலாக சபைகூடுதலில் ஞாயிறு ஆராதனை, பிரசங்கம், கர்த்தருடைய இராப்போஜனம், முழுஇரவு ஜெபம், குடும்ப ஜெபக்கூட்டம் போன்ற சபைக்கடுத்த காரியங்களை கொண்டு சென்று தொழில்நுட்ப இணையதளங்கள் வாயிலாக சீர்கேடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை இவர்கள் தங்களுக்கு கௌரவமாக நினைத்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் ஜனங்களோடு நேரிடையாக ஈடுபடுவதற்குப் பதிலாக பிசாசின் ஆலோசனாகளின்படி ஒரு குறுக்கு வழியை பெற்றுக்கொண்டு மேற்கண்ட இணையதளங்களை கொண்ட மொபைல்களை(கைப்பேசி) பிரசங்கபீடம் மீது வைத்துக்கொண்டு, அதன் வாயிலாக தேவனுடைய செய்தியை பிரசங்கிக்கிறோம் என்கிறார்கள். சபையார் அதை கேட்கும்படி நிர்பந்தப்படுத்தப்படுகிறார்கள். இது தேவனுடைய பிரமாணத்திற்கு, அவர் சுவிஷேசத்தை ஜனங்களுக்கு எடுத்துச்செல்ல கொண்டுள்ள வழிமுறைமைகளுக்கு மாறானது, மற்றும் விரோதமானது. இவர்கள் தேவனுடைய வார்த்தையை Modern way of Transmitting மூலம் ஜனங்களிடம் எடுத்துச் செல்கிறார்கள். அனுப்பப்பட்டவனுக்கு பதிலாக இணையதள செயலிகளை ஈடுபடுத்தி பிசாசு இவர்களை திசை திருப்பி விட்டான். அன்று தேவனுடைய மனுஷனை ஒரு கிழட்டு தீர்க்கதரிசி திசைதிருப்பியது போன்று. தேவன் அனுப்பப்பட்டவனைத்தான் பிரசங்கிக்க, தேவனுடைய வார்த்தையை ஜனங்களிடம் கொண்டு செல்ல வைத்திருக்கிறார். நீங்களோ பிசாசின் ஆலோசனைகளைக் கொண்டு, தேவன் சொன்னதை செய்துவிட்டோம் என்கிறீர்கள். ஆனால் இதுவோ கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்யும் ஆவியாகும்(எபே2:2).

7.நீங்கள் நவீன இணையதள செயலிகள் வாயிலாக சபைக்கடுத்த செய்திகளை/பரிவர்த்தனைகளை Transmit செய்யும்போது, உங்களுடைய ஸ்தானத்தில் அந்த நவீன இணையதள செயலிகள் வந்துவிடுகிறது. ஜீவனில்லாத ஒன்றை கொண்டு நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஜீவனுள்ளோர்களிடம் எடுத்துச் செல்ல முடியாது. ஜீவனுள்ளவர்களிடம் ஜீவனுள்ளவர்களே பேசி இடைபடமுடியும். நீங்கள் உயிரற்ற கீதவாத்தியங்களாக இருக்கிறீர்கள். அது கூடாது. நீங்கள் ஆவியினாலே கருத்தோடு பாடி, கருத்தோடு விண்ணப்பம் பண்ணவேண்டும். தேவனுடைய வார்த்தையை எடுத்துச் செல்ல ஜீவனுள்ள ஒரு மனிதன் தான் தேவை. அவனுடைய நிருபங்களையும் தேவன் அங்கீகரிக்கிறார். முதல் நான்கு சுவிஷேசங்கள் பின் 22 நிருபங்கள் பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியுள்ளது. தேவன் தம்முடைய சாயலாகவும், ரூபத்தின்படியேயும் மனுஷனை சிருஷ்டித்தார். அவனோடு தொடர்பு கொள்ள தேவன் அவரது சாயலாகவும், ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு மனுஷனையே உபயோகிக்கிறார். மனிதனோடு தொடர்பு கொள்ள தேவன் ஒரு ஜீவனற்ற நவீன இணையதள செயலிகளை உபயோகிப்பதில்லை.

8.பாருங்கள் மோசே: நான் வாக்குவல்லன் அல்ல. தேவன்: நீ போ, நான் உன் வாயோடு இருந்து, நீ பேசவேண்டியதை உனக்கு போதிப்பேன். நீ ஆரோனுக்கு தேவனாயிருப்பாய், அவன் உனக்கு வாயாயிருப்பான் என்றார்(யாத்4அதி). முடிவு என்ன? தேவன், மோசே அனுப்பப்பட்டவன். இப்பொழுது ஆரோன் மோசேயின்(அனுப்பப்பட்டவனின்) வார்த்தையைக் கொண்டு ஜனங்களிடத்தில் பேசுகிறான். நீங்களோ ஆரோனுடைய இடத்தில் உங்கள் இணையதள செயலிகளை பயன்படுத்துகிறீர்கள். ஆனால் தேவனோ மனிதர்களைக் கொண்டுதான் மனிதர்களோடு இடைபடுகிறார். அன்று சாத்தான் ஏவாளுக்கு சற்று வித்தியாசமான ஆலோசனையைக் கொடுத்தான். இன்று அவனுடைய தூதர்களைக்(கள்ளகபடமுள்ள வேலையாட்களாகிய பாஸ்டர்கள்) கொண்டு சற்று வித்தியாசமான ஆலோசனைகளை கொடுத்து உங்கள் கரத்திலுள்ள சபைகளை மோசம் போக்குகிறான். ஆதலால் நவீன இணையதள செயலிகள் தேவனுடைய வார்த்தையை சுமந்து செல்லும் மனுஷர்களுக்கு ஈடாகாது. இது தேவனுடைய வார்த்தைக்கு நீங்கள் கொடுக்கும் அவமரியாதையாகும்.

9.முடிவாக, நீ தேவனிடமிருந்து ஜனங்களுக்கு ஒரு செய்தியை கொண்டு வருவாயாகில் உனக்கும், தேவனுடைய செய்தியை உன் வாயிலிருந்து கேட்கும் ஜனங்களுக்கும் மத்தியில் உன் வார்த்தை மாத்திரமே இருக்க வேண்டும். அத்துடன் நீ எழுதும் நிருபங்கள். இதுவே வேதபூர்வமானது. உங்கள் நவீன இணையதள செயலி வாயிலாக பிசாசுக்கே ஊழியம் செய்கிறீர்கள். நீங்கள் பிசாசினால் உபயோகப்படுத்தப்படும் கருவிகளாக இருக்கிறீர்கள். பிசாசு உங்களைக் கொண்டு தேவனுக்கடுத்த காரியங்களை தாறுமாறாக்குகிறான். நீங்கள் அவனுக்கு உடந்தையாக இருந்து செயல்படுகிறீர்கள்,விசுவாசிகளை மோசம்போக்குகிறீர்கள்.

10.தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, இருதயத்திலே குத்தப்பட்டு, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்படுக்றவர்களையே கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வருகிறார்(அப்2:37-47). இவ்வாறாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் ஆங்காங்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒருமனப்பட்டு, ஒன்றுகூடி ஜெபிக்க, தேவனுடைய வார்த்தையைக் கேட்க, தேவனுடைய வார்த்தையினால் போதிக்கப்பட்ட அப்போஸ்தருடைய உபதேசத்தினாலும் அந்நியோந்நியத்தினாலும்(கிறிஸ்துவினால் பெற்ற பலன்களை மற்றவர்களோடு பகிர்ந்து சாட்சி கொடுத்தல், சாட்சியாய் இருத்தல்) கபடமில்லாத இருதயத்தோடு அப்பம் பிட்குதலிலும் ஏகமனதுடையவர்களாய், ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருக்க, பக்திவிருத்தியடைய. கூடுகிறோம். பொதுவாக நாம் சபையாக ஞாயிறு அன்று கூடுகிறோம். ஞாயிறு நமக்கு ஓய்வு நாள் அல்ல. மாறாக அது வாரத்தின் முதலாம் நாள். அந்த வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிறு சபை கூடும் நாளாக இருக்கிறது(அப்20:7). ஆக வாரத்தின் முதலாம் நாள் ஞாயிறன்று ஒரே விசுவாசத்தில், ஐக்கியத்தில் உள்ள நாமனைவரும் ஒருமனப்பட்டு, ஒன்றுகூடி சபையாக தேவனை ஆராதிக்கிறோம். ஆங்காங்கு பற்பல இடங்களில் சபையாக கூடுகிறோம். இதுதான் சபைகூடுதல்.ஆக ஞாயிறு ஆராதனை என்பது சபைகூடுதலாகும்.

11.இப்பொழுது கள்ளகபடமுள்ள வேலையாட்களாகிய பாஸ்டர்கள் சபைகூடும் இடத்தில் உள்ள பிரசங்க பீடத்தில், அல்லது அவருக்கு சாதகமான ஒரு இடத்தை தெரிந்து அங்கு நின்று கொண்டோ அல்லது உட்கார்ந்திருந்தோ தன்முன் தன் மொபைலை ஆன்லைன் பரிவர்த்தனைக்காக செயலிடப் பண்ண வைத்து, அதை பார்த்து பேசி சபை ஆராதனையை நடத்துகிறார்கள். சபையாக கூடிவரவேண்டிய ஜனங்கள் தங்கள் தங்கள் வீடுகளில் தரையில் அமர்ந்து கொண்டோ, ஷோபாக்களில் படுத்துக்கொண்டோ, சமையற்கட்டில் இருந்து சமையல்கள் செய்து கொண்டோ, நண்பர்களுடன் தொலைபேசியில் பேசிக்கொண்டோ, பிள்ளைகளனைவரும் அங்குமிங்கும் ஓடி விளையாடிக்கொண்டோ உலாவிய நிலையில் பாஸ்டருடன் சேர்ந்து ஆன்லைனில் சபை ஆராதனை செய்கிறார்கள். எப்படியோ, சபைகூடுதல், ஞாயிறு ஆராதனை என்ற பெயரில் ஒன்று நடந்தேறுகிறது. இந்த நடைமுறையை வேதவாக்கியங்களின்படி ஆராய்ந்து பார்த்தால் இது பிசாசின் தந்திரமே. நன்கு கவனியுங்கள் சபையானது ஓரிடத்தில் ஒருமனப்பட்டு ஒன்றாகக் கூடிதேவனை ஆராதிக்க வேண்டும். எங்கே இரண்டு மூன்று பேர் என் நாமத்தினாலே ஒருமனப்பட்டு கூடுகிறீர்களோ அங்கே உங்கள் மத்தியில் நான் இருக்கிறேன்(மத்18:19,20). பாஸ்டர் ஓரிடத்தில், விசுவாசிகள் பற்பல இடங்களில் ஆங்காங்கு உட்கார்ந்து கொண்டு இணையதள செயலி மூலமாக அதாவது ஆன்லைனில் ஒன்றாக இணைக்கப்படுவது சபை கூடுதல் ஆகாது. அது ஒரு பயபக்திக்குரிய ஆராதனையும் ஆகாது. அந்த ஆராதனை முறைமை கள்ளங்கபடமுள்ள வேலையாட்களாகிய பாஸ்டர்களின் கெத்து. நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் அமர்ந்து உங்கள் வீட்டிலே சபையாக கூடி தேவனை ஆராதிக்கலாம். இதில் தவறு எதுவும் இல்லை.

12. ஆவிக்குரியவர்களாகிய நாம் வாரத்தின் முதலாம் நாளில் ஓரிடத்தில் சபையாக ஒன்று கூடி ஆவியோடும், கருத்தோடும் பாடி, ஆவியோடும் கருத்தோடும் விண்ணப்பம்பண்ணி நம்முடைய உதடுகளின் ஸ்தோத்திரபலியை ஏறெடுத்து தேவனை ஆராதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்(1கொரி14:15). இப்படியாக பற்பல இடங்களில்

இருந்து கொண்டு எப்படி ஒருமனப்பட்டு ஆவியோடும் கருத்தோடும் பாடி, ஜெபிக்க முடியும்? நான் எழுதுகிறதை நீங்கள் சற்று நிதானத்தோடு நிதானித்து பாருங்கள்.

13. அடுத்து நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாம் எல்லோரும் பங்குகொள்கிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பம் ஒரே சரீரமாயிருக்கிறோம்(1கொரி10:16,17) மதியீனனே, மக்களை மோசம் போக்குவதற்குத்தானே நீ ஆன்லைனில் கர்த்தருடைய இராப்போஜனத்தை மக்கள் அவரவர்கள் இல்லத்திலிருந்து உன்னோடு ஆசரிக்கக் கற்றுக் கொடுக்கிறாயே? உனக்கு ஐயோ! நீ விசுவாசிகள் கர்த்தருடைய இராப்போஜனத்தை அபாத்திரமாய் போஜனபானம் பண்ண கற்றுக் கொடுக்கிறாய். இராப்போஜனத்தின் ஆரம்பத்தைக் கவனி: "நீங்கள் ஓரிடத்தில் கூடி வரும்போது" என ஆரம்பமாகிறது. கர்த்தருடாய இராப்போஜனம் பண்ண நாம் ஓரிடத்தில் கூடி வரவேண்டியவர்களாயாருக்கிறோம் என 1கொரி11:20-ல் வாசிக்கிறோம். நீயோ அது தேவை இல்லை, நீங்கள் எங்கிருந்தாலும் சரி என்னுடன் ஆன்லைனில் இணைந்திருங்கள் அது போதும் என்கிறாய். மாய்மாலக்காரனே, நீ எல்லாம் ஒரு பாஸ்டரா? பிரியமானவர்களே, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபெற நாம் ஓரிடத்தில் ஒன்று கூடி வரவேண்டும்(1கொரி11:33). ஆனால் உங்கள் பாஸ்டரோ இராப்போஜன ஆராதனையை கெத்தாக தன் இல்லத்திலிருந்து/நீங்கள் சபையாக கூடும் இடத்திலிருந்து ஆன்லைனில் நடத்த, நீங்கள் அவர் கூறுகிறபடி உங்கள் இல்லத்திலிருந்து செயல்பட்டு ஆசரிக்க கூடாது. இது பயபக்தியற்ற ஒரு விபரீதமான ஆராதனை. நீங்கள் எங்கு கூடி இருந்தாலும் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதை பிட்டு உங்களுக்கு கொடுக்க, அது போன்று பாத்திரத்தில் பானம்பண்ண உங்களுக்கு பரிமாற ஒரு நபர் உங்கள் மத்தியில் தேவை. இதற்கு பாஸ்டர்தான் தேவை என்ற அத்தியாவசியம் இல்லை. நீங்களே உங்கள் இல்லத்தில் கூடி ஆசரிக்கலாம். ஆதலால் பாஸ்டர் என்பவர் ஆன்லைனில் உங்களிடம் ஒன்றை கூற கூற, அதன்படி நீங்கள் அப்பத்தை எடுத்து பிட்டு, புசிக்க, பானம்பண்ணக்கூடாது. நான் மேலே கூறியபடி நீங்கள் உங்கள் வீட்டில் சபையாக கூடலாம்(கொலோ4:15). கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கலாம்(அப்2:46). இது உங்களது சுயாதீனம். இதில் உங்கள் பாஸ்டர் உங்களை கட்டுப்படுத்த/நிர்ப்பந்தப்படுத்த முடியாது.உங்கள் பாஸ்டர்களுடைய கெத்துக்கு நீங்கள் இரையாகாதீர்கள். ஆதலால் உங்கள் சுயாதீனத்தை பறிக்கும் கள்ளகபடமுள்ள வேலையாட்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம்உங்களை விடுதலையாக்கும். ஆமென்.

ஆகஸ்ட்**2020, வாட்ஸ்ஆப்செய்தி.**

**கிறிஸ்துவின்அன்பில்**
**சகோ.காலேப்யோசுவா**